# EASTERN UNIVERSITY, SRI LANKA
## FACULTY OF COMMERCE AND MANAGEMENT
## EXTERNAL DEGREE PROGRAMME
## PART - I EXAMINATION IN BACHELOR OF COMMERCE – 2000/ 2001
## (REPEAT) (JUNE/ JULY 2007)
## COM 206 COST ACCOUNTING

சகல வினாக்களுக்கும் விடை தருக. நேரம் : 03 மணித்தியாலங்கள்

கணித்தல் பொறி அனுமதிக்கப்பட்டுள்ளது

---

01. (i) ஓர் சிறந்த கிரயக் கணக்கியல் முறைமையின் பண்புகளையும் தொழிற்பாடுகளையும் தருக.

(03 புள்ளிகள்)

(ii) "கிரய அலகு" என்றால் என்ன? பின்வரும் கிரய நிலையங்களுக்கு பொருத்தமான கிரய அலகுகளைத் தருக.

(அ) போக்குவரத்து சேவை

(ஆ) நீராவி உற்பத்தி

(இ) மின்சாரம் உற்பத்தி

(ஈ) தேனீர்சாலை

(04 புள்ளிகள்)

(iii) பின்வரும் உற்பத்தி செயற்பாடுகளுக்கு பொருத்தமான கிரயமிடல் முறையைத் தருக.

(அ) இறைச்சி பொதி செய்தல்

(ஆ) உருக்கு உற்பத்தி

(இ) மர தளபாட உற்பத்தி

(ஈ) தொலைக்காட்சிப் பெட்டி உற்பத்தி

(04 புள்ளிகள்)

(iv) (அ) இருப்பு கட்டுப்பாடு என்பதனால் நீர் புரிந்து கொள்வது யாது? இதன் நோக்கங்களை விளக்குக.

(ஆ) உதிரிப்பாகம் ஒன்றிற்கான வருடாந்த கேள்வி 200,000 அலகுகள் ஆகும். இதன் ஒரு அலகை ஒரு ஆண்டுக்கு இருப்பில் பேணுவதற்கான செலவு ரூபா 320/- ஆகும். ஓர் கட்டளையை பிறப்பிப்பதற்காக ஏற்படும் செலவு ரூபா 1,800/- ஆக மதிப்பிடப்பட்டுள்ளது. பொருளாதார கட்டளையிடற் தொகையை (Economic Ordering Quantity) கணிக்குக.

(05 புள்ளிகள்)

(v) "கொள்வனவு கோரிக்கை" யாரால் யாருக்கு சமர்ப்பிக்கப்படும்? இது சமர்ப்பிப்பதன் நோக்கம் யாது?

வரையறுத்த் "உஷார்" நிறுவனமானது "திகில்" என்னும் பால்மா பைக்கட்டுக்களை கொள்வனவு செய்து விற்பனை செய்கின்றது. ஆரம்ப இருப்பாக ரூபா 200/- விலையில் கொள்வனவு செய்யப்பட்ட 10,000/- பொதிகள் இருந்தது. அக்டோபர் மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட கொள்வனவு, வழங்கல் பற்றிய விபரங்கள் பின்வருமாறு :

அக்டோபர் 04 கொள்வனவு 2,000 அலகுகள் ரூபா 250/- படி

அக்டோபர் 10 கொள்வனவு 5,000 அலகுகள் ரூபா 300/- படி

அக்டோபர் 12 வழங்கல் 16,000 அலகுகள்

அக்டோபர் 20 கொள்வனவு 10,000 அலகுகள் ரூபா 350/- படி

அக்டோபர் 28 வழங்கல் 10,000 அலகுகள்

இறுதி இருப்பின் பெறுமதியினை, இறுதியில் வந்து முதலில் செல்லும் (LIFO) வழங்கல் முறையின் அடிப்படையில் கணிப்பிடுக.

**(07 புள்ளிகள்)**

(vi) (அ) "ஊழியர் புரள்வு வீதம்" என்பதனால் விளங்கிக் கொள்வது யாது?

(ஆ) இதற்கான காரணங்களை வரிசைப்படுத்துக.

(இ) நிறுவனத்திற்கு இது ஏற்படுத்தும் விளைவுகளைப் பட்டியலிடுக.

(ஈ) இதனைக் குறைப்பதற்காக நிறுவனம் கைக்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் யாவை?

(உ) ஊழியப் புரள்வு நிறுவனத்திற்கு கொண்டு வரக்கூடிய செலவுகள் யாவை?

(ஊ) "மக்கள் நலம்" நிறுவனத்தில் கடந்த ஆண்டில் தொழில் புரிந்த சராசரி ஊழியர்களின் எண்ணிக்கை 520 ஆகும். அக்காலத்தில் நிறுவனத்தை விட்டு விலகிய ஊழியர்களின் தொகை 95. கடந்த ஆண்டிற்கான ஊழிய புரள்வு வீதத்தைக் கணிக்கவும்.

**(09 புள்ளிகள்)**

(vii) பீற்றா என்னும் பொருள் உற்பத்தி தொடர்பான ஓர் குறித்த காலத்திற்குரிய பாதீடும், உண்மை தரவுகளும் பின்வருமாறு :

| | பாதீடு | உண்மை |
|---|---|---|
| உற்பத்தி | 2,000 அலகுகள் | 2,500 அலகுகள் |
| விற்பனை | 2,000 அலகுகள் @ ரூபா 150/- | 2,250 அலகுகள் @ ரூபா 150/- |
| நேர் மூலப்பொருள் செலவு | 6,000 கிலோ @ ரூபா 20/- | ரூபா 120,000/- செலவில் 5,000 கிலோ |
| நேர் ஊழிய செலவு | 4,000 மணி @ ரூபா 20/- | ரூபா 90,000 செலவில் 6,000 மணி |

ஆரம்ப இறுதி இருப்புக்கள் எதுவும் இல்லை என்ற அடிப்படையில் பின்வருவனவற்றைக் கணிக்கவும்.

(அ) மூலப்பொருள் விலை முரண்

(ஆ) மூலப்பொருள் பாவனை முரண்

(இ) ஊழிய வீத முரண் (Labour rate variance)

(ஈ) ஊழிய திறன் முரண் (Labour efficiency variance)

**(08 புள்ளிகள்)**

**(மொத்தம் 40 புள்ளிகள்)**

02. 31.12.2006 இல் முடிவுற்ற ஆண்டிற்கான "ஆரோக்கியம்", "வைராக்கியம்" ஆகிய இரு தனியார் வைத்தியசாலைகள் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு :

| | ஆரோக்கியம் | | வைராக்கியம் | |
|---|---|---|---|---|
| உள்ளக நோயாளிகள் தொகை | 15,400 | | 710 | |
| ஒரு நோயாளிக்கான சராசரி தங்கியிருத்தல் காலம் | 10 நாட்கள் | | 156 நாட்கள் | |
| வெளி நோயாளர் தொகை | 130,000 | | 3,500 | |
| கட்டில்கள் தொகை | 510 | | 320 | |
| நோயாளிகள் பயன்படுத்திய கட்டில்களின் சராசரி தொகை | 402 | | 307 | |
| கிரய ஆய்வு (ரூபாயில்) | உள் நோயாளிகள் | வெளி நோயாளிகள் | உள் நோயாளிகள் | வெளி நோயாளிகள் |
| நேரடி சிகிச்சை செலவுகளும் மருந்து செலவுகளும் | 6,213,900 | 1,076,400 | 1,793,204 | 70,490 |
| மருத்துவ உதவி சேவைகள் | | | | |
| - நோய் காணல் | 480,480 | 312,000 | 22,152 | 20,650 |
| - பிற சேவைகள் | 237,1606 | 288,600 | 77,532 | 27,790 |
| பொது சேவைகள் | | | | |
| - நோயாளிகளுக்கானது | 634,480 | 15,600 | 399,843 | 7,700 |
| - பொதுவானது | 2,196,760 | 947,700 | 1,412,900 | 56,700 |

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

(அ) ஒவ்வொரு வைத்தியசாலைக்குமான

(i) உள்ளக நோயாளிகளுக்கான செலவு

(ii) வெளியக நோயாளிகளுக்கான செலவு

(ஆ) ஒவ்வொரு வைத்தியசாலைக்குமான நோயாளர் கட்டில் பாவனை வீதம்.

(இ) கணிப்புக்கள் தொடர்பாக உங்கள் கருத்துக்களைத் தருக.

**(10 புள்ளிகள்)**

03. "மெஸ்கோ" உற்பத்தி நிறுவனம் ஐந்து கிரய நிலையங்களைக் கொண்டுள்ளது. இவற்றில் A, B, C, D என்பவை உற்பத்தியிலும், E சேவை வழங்குவதிலும் ஈடுபட்டுள்ளது. ஓர் குறித்த காலத்திற்கான நிறுவனம் பற்றிய உண்மை கிரய தரவுகள் பின்வருமாறு :

| கிரய வகை | கிரய தொகை ரூபாவில் |
|---|---|
| திருத்த வேலைகள் (கட்டடம்) | 2000,000 |
| வாடகை | 2500,000 |
| பெறுமான தேய்வு (இயந்திரம்) | 1200,000 |
| மேற்பார்வை | 4000,000 |
| காப்புறுதி (இயந்திரம்) | 1500,000 |
| ஊழியருக்கான பொறுப்புக்கள் | 600,000 |
| வெளிச்சம் | 1800,000 |

பின்வரும் மேலதிக தரவுகள் தரப்பட்டுள்ளது.

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| தளப்பரப்பு (சதுர அடி) | 140 | 120 | 110 | 90 |
| ஊழியர் தொகை | 25 | 20 | 10 | 10 |
| மொத்தக் கூலி (ரூபா) | 10,000 | 8,000 | 5,000 | 5,000 |
| இயந்திர பெறுமதி (ரூபா) | 20,000 | 18,000 | 16,000 | 10,000 |

பொருத்தமான அடிப்படைகளைப் பயன்படுத்தி மேந்தலை செலவுகளை ஒவ்வொரு நிலையங்களுக்கும் பகிர்வு செய்க.

**(15 புள்ளி**

04. வடித்தல், காய்ச்சல் என்னும் இரு தனித்துவமான செயன்முறைகளினூடாக ஒரு பெ உற்பத்தி செய்யப்படுகின்றது. இச் செய்முறையின் போது சாதாரண இழப் வடித்தலுக்கு 3% மும், காய்ச்சலுக்கு 5% மும் ஏற்படுகின்றது.

இந்த இழப்பீட்டு கழிவுகள் முறையே அலகு 50 சதப்படியும், அலகு ரூபா 1/- விற்பனை செய்யப்படுகின்றது. ஆரம்ப உள்ளீடாக வடித்தலுக்கு 10,000 அலகுகள் ரூபா 2/- விலையில் வழங்கப்பட்டது. ஏனைய செலவுகள் பின்வருமாறு அமைந்திரு

| | செய்முறை | |
|---|---|---|
| | வடித்தல் | காய்ச்சல் |
| சில்லறை உள்ளீடுகள் (ரூபா) | 2,000 | 3,000 |
| கூலி (ரூபா) | 10,000 | 16,000 |
| மேந்தலைகள் (ரூபா) | 2,100 | 2,375 |
| உண்மையான வெளியீடுகள் (அலகுகள்) | 9,500 | 9,100 |

பின்வருவனவற்றைத் தயாரிக்கவும்.

(அ) செய்முறைக் கணக்குகள்
(ஆ) சாதாரண நட்ட கணக்குகள்
(இ) அசாதாரண நட்ட கணக்கு
(ஈ) அசாதாரண இலாப கணக்கு
(உ) கழிவு விற்பனை கணக்கு

**(20 புள்ளிகள்)**

05. (அ) இலாப நட்டமற்ற புள்ளி என்பதனால் நீங்கள் விளங்கிக் கொள்வது யாது?

(ஆ) இலாப நட்ட புள்ளி தொடர்பான கணிப்பின் அடிப்படை எடுகோள்கள் யாவை?

(இ) இதன் வரையறைகள் யாவை?

(உ) "FLASH" என்னும் சலவைத்தூள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தின் பதிவுகளிலிருந்து பின்வரும் தரவுகள் பெறப்பட்டன.

| | |
|---|---|
| அலகுக்கான விற்பனை விலை | ரூபா 20/- |
| அலகுக்கான நேர்மூலப்பொருள் கிரயம் | ரூபா 5/- |
| அலகுக்கான நேர் ஊழிய கிரயம் | ரூபா 3/- |
| அலகுக்கான மாறும் மேந்தலை கிரயம் | ரூபா 2/- |
| பாதீடு செய்யப்பட்ட உற்பத்தி மட்டமும் விற்பனையும் | 80,000 அலகுகள் |
| பாதீடு செய்யப்பட்ட அலகுக்கான நிலையான மேந்தலை செலவு | ரூபா 5/- |

பின்வருவன வேண்டப்படுகின்றன :

(i) இலாப நட்டமற்ற வரைபை வரைந்து இலாப நட்டமற்ற புள்ளியைக் கணிப்பிடுக.

(ii) இவ் வரைபைப் பயன்படுத்தி, பின்வரும் நிலைமைகளில் இலாப நட்டமற்ற புள்ளியில் ஏற்படக்கூடிய தாக்கங்களை விபரிக்குக.

அலகுக்கான விறபனை விலை 30% அதிகரிக்கும் போது
அலகுக்கான விறபனை விலை 10% குறையும் போது

**(15 புள்ளிகள்)**